**chief**

DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No.127/2015
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW2 |
| Name | : செல்வலட்சுமி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : சார்பதிவாளர், சிவகிரி சார்பதிவாளர் அலுவலகம் |
| Religion | : |
| Age | : |
| Date | : 22.07.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது சிவகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப் பெற்றதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணை அலுவலக கோப்பில் கலந்துவிட்டதன் காரணமாக 29.06.2026 அன்று சாட்சியம் அளிக்க வர இயலாமல் போய்விட்டது. அழைப்பாணையில் கண்டுள்ள 23.06.1988 ஆம் தேதிய உயில் ரத்து ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். 23.06.1988 ஆம் தேதிய உயில் ரத்து ஆவணத்தின் சான்றிட்ட நகல் **சாட்சி சான்றாவணம் 1** ஆகும்.

**குறுக்குவிசாரணை**

ரத்து ஆவணம் எந்த சூழ்நிலையில், எதற்காக எழுதப்பட்டது என்ற விபரம் ரத்து ஆவணத்தை எழுதிய நபர் மற்றும் சாட்சி கையொப்பமிட்ட நபர்களை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். உயில் ரத்து ஆவணம் பற்றி விபரம் ஏற்கனவே

உயில் ஆவணத்தின்படியான பயனாளிக்கு ரத்து ஆவணத்தை பிறப்பித்த நபர்கள் தெரிவித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். உயிலை எழுதியது ராமையா செட்டியார் மற்றும் அவரது மனைவி இசக்கியம்மாளும் சேர்ந்து எழுதி வைத்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் ரத்து ஆவணத்தை பதிவு செய்யும் பொழுது இசக்கியம்மாள் இறந்துவிட்டார் என்பதற்கான இறப்பு சான்றிதழ் எதையும் தாக்கல் செய்யவில்லை. உயில் சொத்தில் இசக்கியம்மாளுக்கு எவ்வாறு உரிமை உள்ளது என்ற விபரம் ரத்து ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான்.